IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No.159 /2012

Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | :, ஹரிபாபு | Caste | : - |
| Father's Name | : திருநீலகண்டன் | Calling | : புகைப்படக்கலைஞர் |
| Village | : சேவூர் | Religion | : இந்து |
| Taluk | : - | Age | : 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 27 day of February, 2020.

Chief Examination

நான் இந்த வழக்கின் 1ம் வாதி. என்னை வாதிகள் தரப்பில் 1-வது சாட்சியாக முதல் விசாரணை செய்கிறேன். இத்துடன் எனது நிரூபணவாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 1986-1987ம் ஆண்டிற்கான வீட்டுவரி ரசீது (எண்ணிக்கை-12) வா.சா.ஆ1 முதல் வா.சா.ஆ12 ஆக தாக்கல் செய்கிறேன். தாவா சொத்திற்ககுரிய மின் இணைப்பு எனது தாயார் சாந்தாராணி என்பவரது பெயரில் உள்ளது அதற்கான மின் இணைப்பு எண்.752-க்கான நுகர்வு அட்டைகள் (எண்ணிக்கை-3) வா.சா.ஆ13 முதல் வா.சா.ஆ16 ஆகும். மேற்கண்ட மின் இணைப்பு எண்ணிற்கான மின் கட்டண ரசீதுகள் முறையே வா.சா.ஆ 17 முதல் வா.சா.ஆ44 ஆகும். 30.11.2004ம் தேதியிட்ட தகரகுப்பம் சேவூரில் உள்ள அங்கன்வாடி சம்மந்தமாக காட்பாடி குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் அவர்களின் செயல்முறைகள் வா.சா.ஆ 45 ஆகும். எனது தாயார் 20.02.2010 அன்று இறந்துபோனார் அதற்கான இறப்பு சான்றிதழ் அது வா.சா.ஆ46 ஆகும். வாரிசு சான்றிதழ் வா.சா.ஆ47 ஆகும். வழக்கறிஞர் அறிவிப்பு 2.12.2010-ம் தேதியிட்டது வா.சா.ஆ48 ஆகும். அதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ49 ஆகும். மாவட்ட ஆட்சியருக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ50 ஆகும். அதை அவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை வா.சா.ஆ51 ஆகும். காட்பாடி வட்டாட்சியர்

வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை வா.சா.ஆ52 ஆகும். மின் இணைப்பு கட்டண ரசீது 6.3.2012ம் தேதியிட்டது வா.சா.ஆ53 ஆகும். தாவா சொத்தை எனக்கு பாத்தியப்பட்டது என விளம்புகை செய்யவும், சுவாதீனம் கொடுக்கவும் கேட்டுக்கொள்கிறேன்.

(Sd/-)..R.Rajamaheswar
DISTRICT MUNSIF
KATPADI.